1980 ஜூலை 16]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போது அரசாங்க ஆணைப்படி ரூ. 200 தான் கொடுக்கிறோம். ரூ. 500 என்பது நமது நிதி நிலைமைக்கு ஏற்றுவராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஹரிஜன் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பது அங்கே மட்டுமல்ல, தமிழ்நாடு பூராவும் பரவலாக திட்டம் போட்டு அந்த வேலைகள் நடைபெறுகின்றன. அதே போல் தஞ்சை மாவட்டத்திற்கும் அதன் பகுதி கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. திருப்பரங்குன்றத்தில் 'கதம்ப வண்டு' கடித்து மூன்று பேர்கள் இறந்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் 'கதம்ப வண்டு' கடித்து மூன்று பேர் இறந்ததினால் அங்குள்ள பொது மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22—5—80 அன்று திரு. முத்துசாமி தேவர் என்பவர் விறகு வெட்டுவதற்காக இம்மரத்தில் ஏற, அங்கு இப்பூச்சிகள் இவரை கடித்ததினால், மரத்தில் இருந்து இறங்கி அந்த பூச்சிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அருகிலுள்ள குளத்தில் இறங்கினார். அப்பகுதி மக்கள் அவரைக் காப்பாற்றி அப்பகுதியிலுள்ள ஒரு நாட்டு வைத்தியரிடம் சிகிச்சையளிக்கச் செய்தனர். சிகிச்சை பலனளிக்காது போகவே அவர் அன்றே இறந்துவிட்டார். இதன் காரணமாக அவ்வூர் மக்கள் அவ்வழியாகப் போவதைத் தவிர்த்தனர். அதற்குப்பின் நால்வர் அப்பூச்சியினால் கடிக்கப்பட்டனர். எவரும் இறக்க வில்லை.

திருப்பரங்குன்றம் நகராட்சி நிர்வாக அதிகாரி சுகாதார அலுவலரின் ஒத்துழைப்புடன் இம்மரத்தை எரிக்க நடவடிக்கை எடுத்தார். பெரும்பாலான பூச்சிகள் மடிந்துவிட்டன. சில பூச்சிகள் மட்டும் பறந்து அருகிலுள்ள மரத்தில் வசிக்கத் தொடங்கியுள்ளன. இம்மரத்திலுள்ள பூச்சிகளையும் அழிப்பதற்கு பூச்சிக்கொல்லி மருந்தை தெளிக்க மாவட்ட நல அலுவலர்கள் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இதனால் பெருமளவில் யாரும் மருத்துமனையில் அனுமதிக்கப்படவில்லை. நிலைமை அமைதியாக உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: 'ஸ்வார்ம்பீஸ்' என்ற ஆங்கிலப் படத்தில், வண்டுகள் வந்து அந்த ஊர் மக்களை எல்லாம் கொன்றுவிட்டு வண்டுகளை அழிக்கப்போன விஞ்ஞானியையும் கொன்றுவிட்டது. திருப்பரங்குன்றத்தில் காவடி தூக்கி ஆடிய பக்தர்களை எல்லாம் கடித்துவிட்டு அவர்களை முருகக் கடவுளும் காப்பாற்ற முடியவில்லை. இங்குள்ள அதிகாரிகள் போய் அவர்களைக் காப்பாற்ற முடியுமா? அல்லது அவர்களையும் கடித்து விட்டதா? அங்கே திரு. முத்துசாமி தேவர் என்பவர் இறந்திருக்கிறார். அவருக்கு குழந்தைகள் கிடையாது. மனைவி ஒன்று தான் இருக்கிறது. அந்த மனைவி ஏழையாக இருப்பதால் முதல் அமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து அந்தக் குடும்பத்திற்கு ரூபாய் கொடுக்க ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அந்தப்பகுதியில் குறிப்பாக திருப்பரங்குன்றம் ஆலயப் பகுதியில் பல காலமாக கதம்பவண்டு என்ற பூச்சி இருக்கிறது. ஆனால் இவ்வளவு ஆண்டுகளாக எந்தவிதமான தொல்லையும் கொடுக்கவில்லை, இப்போதுதான் முதன்முதலாக இப்பேர்ப்பட்ட சேதம் ஏற்பட்டிருக்கிறது. அங்குள்ள அதிகாரிகளைப் பார்த்து அந்தப் பூச்சிகளையெல்லாம் கொல்ல ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். இன்னொன்றைச் சொன்னார்கள். முதல்வர் அவர்கள் ரிலீப் பண்டிலிருந்து ஏதாவது பணம் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக நம் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் அதற்காக ஒரு விண்ணப்பம் கொடுப்பார்களேயானால் அதை முதல் அமைச்சர் அவர்களிடம் வைத்து அதற்குப்பரிந்துரை செய்து எல்லாவிதமான ஒத்துழைப்பும் நடவடிக்கைகளும் என்னைப் பொறுத்தவரையில் நான் எடுக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[முற்பகல் 10.30]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக்கு ஒரு மரம் நடவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. ஆனால் அந்த மரத்தை இந்த அதிகாரிகள் வெட்டியிருக்கிறார்கள். பழையபடி அந்த வண்டுகள் அடுத்த மரங்களுக்கு போய் இருக்கின்றன. ஆதலால், அந்த மரங்களை வெட்டாமல், வண்டுகள் திரும்பத் திரும்ப வந்துவிடும். நம் கோட்டைக்கே வந்துவிடும், அப்படித் தாக்கினால் கோட்டையைத் தகர்க்க முடியுமா? ஆகவே, அந்த மரங்களை வெட்டாமல், எலிகாப்டர் மூலமாக பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளித்துக் கொல்ல அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மரங்களையும் வெட்டாமல், ஒன்றிரண்டு மரங்களை வெட்டி, அதற்கு எந்த அளவுக்கு

மரங்களை வெட்ட வேண்டுமோ, அந்த அளவில் குறைந்தபட் மரங்கள்தான் வெட்டப்பட்டிருக்கின்றன. அதே நேரத்திலே மரங்களை நடவேண்டுமென்பதற்கு ஆதரவாக, அதற்கு எந்த விதமான குந்தகமும் இல்லாமல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது.

7. அரசினர் சட்ட முன்வடிவு.

அடுக்குக் கடைக்காரர்கள்—கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அடுக்குக் கடைக்காரர்கள்—கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. வரவு-செலவுத் திட்டம், 1980—81 வாக்கெடுப்பு—
(தொடர்ச்சி)

TRUTH ALONE TRIUMPHS

(அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை

(ஆ) கோரிக்கை எண் 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

கோரிக்கை எண் 20

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 58,41,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.